டிஜிட்டல் கல்விப் பணியாளர்கள் சங்கத்தினர் உண்ணாவிரதம்

திருச்சி மாவட்ட ஆட்சியரகம் அருகே செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு டிஜிட்டல் கல்விப் பணியாளர்கள் சங்கத்தினர்.

திருச்சி, செப். 29: ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, திருச்சியில் தமிழ்நாடு டிஜிட்டல் கல்வி பணியாளர்கள் நலச் சங்கத்தினர் செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி மாவட்ட ஆட்சியரகம் அருகே நடைபெற்ற போராட்டத்துக்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் இலக்கியா தலைமை வகித்தார். பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றும் அட்மினிஸ்ட்ரேட்டிவ் கம் இன்ஸ்ட்ரக்டர் பணியாளர்களை தனியார் முகமை மூலம் பணியமர்த்துவதை கைவிட்டு, அரசே நேரடியாக பணியமர்த்த வேண்டும். தற்போது 11 மாதங்கள் மட்டுமே வழங்கப்படும் பணியை ஆண்டு முழுவதும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போதைய விலைவாசி உயர்வுக்கு ஏற்ப ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும். பணிப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

நியாயமான கோரிக்கைகளை கேட்கும் ஊழியர்களுக்கு தனியார் முகமை சார்பில் வழங்கப்படும் நோட்டீஸ், மெமோ உள்ளிட்ட அச்சுறுத்தல்களை தடுத்து நிறுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து பேசினர். இந்தப் போராட்டத்தில் தமிழ்நாடு டிஜிட்டல் கல்விப் பணியாளர் சங்கத்தின் திருச்சி மாவட்டத் தலைவர் செந்தில்நாதன், துணைத் தலைவர் தாஜ் நிஷா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மருத்துவக் கல்லூரியில் 'சீட்' வாங்கித் தருவதாக பண மோசடி

திருச்சி, செப். 29: திருச்சியில் தனியார் மருத்துவக் கல்லூரியில் சீட் வாங்கித் தருவதாக ரூ. 6.5 லட்சம் மோசடி செய்யப்பட்டது குறித்து போலீஸார் விசாரிக்கின்றனர்.

திருச்சி பாலக்கரை காஜாபேட்டையைச் சேர்ந்தவர் முகமது இலியாஸ். இவர், கடந்த ஆண்டு நீட் தேர்ச்சி பெற்ற தனது மகனுக்கு மருத்துவக் கல்லூரியில் சேர்க்கை பெறுவதற்கு முயன்று வந்தார். அப்போது, திருச்சி பொன்னகரைச் சேர்ந்த ரபீக் முகமது திருச்சியிலுள்ள தனியார் மருத்துவக் கல்லூரியில் சீட் வாங்கித் தருவதாக முகமது இலியாஸிடம் உறுதியளித்துள்ளார். இதை நம்பிய அவர், தனது மகனின் மருத்துவ சீட்டுக்காக ரூ.6.5 லட்சத்தை கடந்த 2025 செப்டம்பர் 22–ஆம் தேதி ரபீக் முகமதுவிடம் கொடுத்துள்ளார். ஆனால், அவர் கூறியதுபோல மருத்துவக் கல்லூரியில் சீட் வாங்கித் தரவில்லை. இதையடுத்து முகமது இலியாஸ் தான் கொடுத்த ரூ.6.5 லட்சத்தை ரபீக் முகமதுவிடம் திருப்பிக் கேட்டுள்ளார். ஆனால், தற்போது வரை பணத்தைத் திருப்பித் தரவில்லையாம். இதுகுறித்து பாலக்கரை காவல் நிலையத்தில் முகமது இலியாஸ் திங்கள்கிழமை அளித்த புகாரின்பேரில், போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

அடிப்படை பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை எனப் புகார்

திருச்சி மாநகராட்சி கூட்டத்திலிருந்து திமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு

திருச்சி, செப். 29: திருச்சி மாநகரில் அடிப்படை பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை எனக் கூறி, இதைக் கண்டித்து மாமன்ற கூட்டத்திலிருந்து திமுக உறுப்பினர்கள் செவ்வாய்க்கிழமை வெளிநடப்பு செய்தனர்.

திருச்சி மாநகராட்சி மாமன்ற சாதாரணக் கூட்டம் மேயர் மு. அன்பழகன் தலைமையில், ஆணையர் நே. பொன்மணி, துணை மேயர் ஜி. திவ்யா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டம் தொடங்கியதும், 17–ஆவது வார்டு விசிக உறுப்பினர் பிரபாகரன், சென்னைமாநகராட்சி மாமன்ற அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அம்பேத்கர் படம் அகற்றப்பட்டதைக் கண்டித்து, கையில் அம்பேத்கர் சிலையை ஏந்தி முழக்கங்களை எழுப்பியபடி, வெளிநடப்பு செய்தார்.

திருச்சி மாநகராட்சி மாமன்றக் கூட்டத்திலிருந்து செவ்வாய்க்கிழமை வெளிநடப்பு செய்த திமுக உறுப்பினர்கள்.

அதிகாரிகள் ஒத்துழைப்பதில்லை– மேயர்

கூட்டத்துக்கு பிறகு மேயர் மு. அன்பழகன் செய்தியாளர்களிடம் கூறியது: ஒத்திவைக்கப்பட்ட மாமன்ற கூட்டம், இடைத்தேர்தலுக்கு பிறகு நடத்தப்படும். கடந்த 4 மாதங்களாக எந்தவொரு அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க முடியாத சூழல் நிலவுகிறது. அதிகாரிகள் போதிய ஒத்துழைப்பு தருவதில்லை என்றார்.

அத்தியாவசிய பிரச்னைகளுக்கு தீர்வு–ஆணையர்: ஆணையர் நே. பொன்மணி கூறுகையில், அமைச்சரின் ஆய்வுக் கூட்டம் தொடர்பாக அலுவலர்கள், மேயரிடம் தகவல் அளித்ததாகக் கூறினர். மேயர், மாமன்ற உறுப்பினர்கள் கூறும் மக்கள் பிரச்னைகளில் முதன்மையான மற்றும் அத்தியாவசியமானப் பிரச்னைகளுக்கு தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

இதையடுத்து மேயர் மு.அன்பழகன் பேசுகையில், கடந்த 4 மாதங்களாக மக்களின் அடிப்படை பிரச்னைகளைக் கூட தீர்க்க முடியாத இக்கட்டான சூழல் நிலவுகிறது. இதைக் கண்டித்து திமுக மாமன்ற உறுப்பினர்கள் கருப்பு உடை அணிந்து வந்துள்ளனர். ஆணையர், அரசிடம் எடுத்துக்கூறி மக்களின் அடிப்படை பிரச்னைகளை உடனுக்குடன் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். திருச்சி மாவட்ட பொறுப்பு அமைச்சர், மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்குத் தகவல் தெரிவிக்காமல் மாநகராட்சி அதிகாரிகளை அழைத்து ஆய்வுக்கூட்டம் நடத்தியுள்ளார். இது ஏற்க முடியாத செயல். இதுபோன்ற செயல் இனி நடக்கக்கூடாது என்றார்.

பிறகு மாமன்ற உறுப்பினர்கள் பேசியது:

முத்துச்செல்வம் (திமுக), சுரேஷ் (சிபிஎம்), சுரேஷ் (சிபிஐ): மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கையொட்டி அங்கு பணிக்கு சென்ற திருச்சி மாநகராட்சி தூய்மைப் பணியாளர் உடல்நலக் குறைவால் உயிரிழந்துள்ளார். அவரது குடும்பத்துக்கு ரூ. 50 லட்சம் இழப்பீடும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்க வேண்டும்.

துணை ஆணையர் அஜிதா: இழப்பீடு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முத்துச்செல்வம் (திமுக): மாநகரில் குடிநீர் பிரச்னை உள்ளிட்ட எந்தவித அடிப்படைப் பிரச்னைகளுக்கும் கடந்த சில மாதங்களாக தீர்வு காணப்படவில்லை. இதை கண்டித்தும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மக்கள் பிரதிநிதிகளை மதிக்காமல், மாவட்ட பொறுப்பு அமைச்சர் தன்னிச்சையாக அதிகாரிகளை அழைத்து கூட்டம் நடத்தியதைக் கண்டித்தும் வெளிநடப்பு செய்கிறோம் எனக் கூறி, அனைத்து திமுக உறுப்பினர்களும் வெளிநடப்பு செய்தனர்.

அதிமுகவும் வெளிநடப்பு...: அம்பிகாபதி (அதிமுக) பேசுகையில், வெறும் 5 உறுப்பினர்களை வைத்துக் கொண்டு கூட்டம் நடத்துவது ஏற்புடையதல்ல. முறை தவறிய இக்கூட்டத்தை ரத்து செய்ய வேண்டும் எனக் கூறி, மேயரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, வெளிநடப்பு செய்தார். அவருடன் அதிமுக உறுப்பினர்கள் அரவிந்தனும், அனுசுயாவும் வெளியேறினர்.

பைஸ் அகமது (மமக): பல முறை கோரிக்கை விடுத்தும், எனது வார்டில் சாலை வசதி, வடிகால் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படாததைக் கண்டித்து வெளிநடப்பு செய்கிறேன் எனக் கூறி வெளியேறினார்.

கூட்டம் ஒத்திவைப்பு...: தொடர்ந்து வெளியேறிய அனைத்து திமுக உறுப்பினர்களும் கூட்டத்துக்கு வந்து, சில உறுப்பினர்களை மட்டும் வைத்துக் கொண்டு கூட்டத்தை நடத்துவது ஏற்புடையதல்ல எனக் கூறி மேயரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து மேயர், கூட்டத்தை ஒத்திவைத்தார்.

முதலில் வெள்ளை நிறைவில் கருப்பு

திமுக உறுப்பினர்கள் அனைவரும் கருப்பு உடை அணிந்து வந்திருந்த நிலையில், திமுக உறுப்பினரான காஜாமலை விஜய் மட்டும் வெள்ளை உடையில் கூட்டத்துக்கு வந்திருந்தார்.

திமுக உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறிய பிறகும் அவையில் அமர்ந்திருந்த அவர், தனக்கு தகவல் கொடுக்கவில்லை எனக்கூறி வெளியில் சென்று, கருப்புச் சட்டை அணிந்து வந்து பேசினார். பின்னர், மக்கள் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை எனக் கூறி மீண்டும் வெளியேறினார்.

பிரதான வாய்க்கால்களில் 215 கி.மீ. தொலைவுக்கு தூர்வாரும் பணி

திருச்சி, செப். 29: வடகிழக்குப் பருவமழையையொட்டி, திருச்சி மாநகரில் 215.74 கி.மீ. தொலைவுக்கு பிரதான வாய்க்கால்கள், மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்தப் பணிகளுக்கு ரூ. 3.18 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நாட்டு வாய்க்கால், சம்பா வாய்க்கால், கோட்டை வாய்க்கால், வெனிஸ் தெரு, வடக்கு ஆண்டார் தெரு, பட்டர்வொர்த் சாலை, மதுரா கார்டன் வாய்க்கால், எஸ்.எஸ். நகர் வாய்க்கால், ராஜீவ்காந்தி நகர் வாய்க்கால், லயன்டேட்ஸ் வாய்க்கால், பூசாரித் தெரு வாய்க்கால், ரெட்டைவாய்க்கால், வசந்த நகர் உய்யக்கொண்டான் வாய்க்கால், கத்தரி வாய்க்கால், காத்தான் வாய்க்கால், செல்வா நகர் வாய்க்கால், விருப்பாட்சிபுரம் வாய்க்கால் போன்ற முக்கிய வாய்க்கால்களும், நகரின் உள்பகுதிகளில் உள்ள பிற மழைநீர் வடிகால்களும் தூர்வாரப்பட உள்ளன.

அவசர நிலைகளை எதிர்கொள்ள கூடுதல் ஏற்பாடுகள்: மழைநீர் தேங்குவதைத் தடுப்பதுடன், பருவமழைக்கால அவசர நிலைகளை எதிர்கொள்ள மாநகராட்சி நிர்வாகம் பல்வேறு ஏற்பாடுகளை செய்துள்ளது. தாழ்வான பகுதிகளில் தேங்கும் தண்ணீரை உடனடியாக வெளியேற்ற டீசலில் இயங்கும் ராட்சத மோட்டார் பம்புகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. 5 மண்டலங்களிலும் தலா 2 மோட்டார் பம்புகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பலத்த காற்றால், மரங்கள் முறிந்து விழுவதைத் தடுக்க ஆபத்தான மரக்கிளைகளை வெட்டும் இயந்திரங்கள் மற்றும் பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே அனைத்து வடிகால் தூர்வாரும் பணிகளையும் முழுமையாக முடித்து, தடையற்ற நீரோட்டத்தை உறுதி செய்ய மாநகராட்சி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாநகராட்சி நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

ஆற்றில் மீன்பிடித்த இளைஞர் தண்ணீரில் மூழ்கி உயிரிழப்பு

ஸ்ரீரங்கம், செப். 29: திருவானைக்காவல் கொள்ளிடம் ஆற்றில் செவ்வாய்க்கிழமை மீன்பிடித்த இளைஞர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார்.

திருச்சி அரியமங்கலம் பகுதியை சேர்ந்தவர் சம்சுதீன் (24). இவர் திருவானைக்காவல் கொள்ளிடம் ஆற்றில் மீன் பிடித்து கொண்டிருந்தபோது, ஆழமான பகுதியில் தண்ணீரில் மூழ்கினார். தகவலின்பேரில், அங்குவந்த ஸ்ரீரங்கம் தீயணைப்பு துறையினர் உதவியுடன் சம்சுதீன் உடலை ஸ்ரீரங்கம் போலீஸார் மீட்டு அரசு மருத்துவமனைக்கு கூறாய்வுக்கு அனுப்பிவைத்து வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆர்ப்பாட்டம்

திருச்சி, செப். 29: திருச்சியில் வேளாண்மை துணை இயக்குநரைக் கண்டித்து, தமிழ்நாடு உதவி வேளாண்மை அலுவலர் சங்கத்தினர் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி மன்னார்புரத்தில் உள்ள வேளாண்மை துணை இயக்குநர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டச் செயலாளர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார்.

இதில், டிஜிட்டல் பயிர் கணக்கெடுப்பு பணி வருவாய்த் துறை சார்ந்தது. ஆனால், எந்தவித அடிப்படை ஆவணங்கள், கட்டமைப்பு வசதிகள் இல்லாமல் கணக்கெடுப்புப் பணி உதவி வேளாண்மை அலுவலர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பணியில் ஒவ்வொருவருக்கும் ஒருவிதமான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. சமமற்ற முறையில் பரப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், கணக்கெடுப்புப் பணியில் குறைவான செயல்பாடு எனக் கூறி, ஒருசில உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு வேளாண்மை துணை இயக்குநர் குறிப்பாணை வழங்கி, அவர்களின் ஊதியத்தையும் நிறுத்திவைத்துள்ளார். எனவே, குறிப்பாணைகளை திரும்பப் பெறவும், நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஊதியத்தை உடனடியாக வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு உதவி வேளாண்மை அலுவலர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் க. மாசிலாமணி, மாவட்ட துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், மாவட்டப் பொருளாளர் பிச்சை பிள்ளை மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தீக்குளித்த நீதிமன்ற பெண் ஊழியர் உயிரிழப்பு

துறையூர், செப். 29: துறையூரில் குடும்பப் பிரச்னை காரணமாக, தீக்குளித்த நீதிமன்ற பெண் ஊழியர் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

துறையூரில் குடில் அருகே வசித்துவந்தவர் அ. அபிநயா (33). முசிறி சார்பு– நீதிமன்றத்தில் இ–பைலிங் பிரிவு ஊழியர். கணவருடனான கருத்து வேறுபாடு காரணமாக அவரை பிரிந்து வாழ்ந்து வந்தார். இவருக்கு லிவிஸ்ரீ (12) என்ற பெண் குழந்தை உள்ளது.

இந்நிலையில், கடந்த 3 மாதங்களுக்கு முன்பு சந்தோஷ்குமார் (35) என்பவரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டாராம். இந்தத் தம்பதி இடையே திங்கள்கிழமை இரவு கருத்து வேறுபாடு ஏற்பட்டதையடுத்து, அபிநயா தனக்குத் தானே தீ வைத்துக் கொண்டார்.

அப்போது, அவரைக் காப்பாற்ற முயன்ற சந்தோஷ்குமாரும் தீக்காயமடைந்தார்.

அக்கம்பக்கத்தினர் இருவரையும் மீட்டு துறையூர் தனியார், திருச்சி அரசு மருத்துவமனைகளில் சேர்த்தனர். இவர்களில் அதிக தீக்காயமடைந்த அபிநயா சிகிச்சைப் பலனின்றி செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார். சம்பவம் தொடர்பான புகாரின்பேரில் துறையூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

Change of Name

I, MANIRAJ, S/o. BASKARAN, residing at No.229/720, 15th Ward, Mettu Street, Perambalur Dt-621212, shall henceforth be known as **ABDUL HALIL.**

MANIRAJ

Trichy, 29.09.2026

Change of Name

My Daughter J.Y.NASIRA FATHIMA, (D.O.B 17/02/2015) D/o. Yaseer Arabath, residing at No: 2/344 North Street, Muckanamalaippatti Po, Veerapatti, Illuppur Tk, Pudukkottai Dt- 622103, Tamilnadu, shall be henceforth Known as **NASIRA FATHIMA Y**

RABIYATHUL BASILIYA (Mother)

Illuppur, 19.09.2026

Change of Name

My Daughter J.Y.MUSADDIQA BEGUM (D.O.B 07/02/2012) D/o. Yaseer Arabath, residing at No: 2/344 North Street, Muckanamalaippatti Po, Veerapatti, Illuppur Tk, Pudukkottai Dt- 622103, Tamilnadu, shall be henceforth Known as **MUSADDIQA BEGUM Y**

RABIYATHUL BASILIYA (Mother)

Illuppur, 19.09.2026

Change of Name

My Son J.Y.JAMAL MOHAMMED, (D.O.B 21/06/2021) S/o. Yaseer Arabath, residing at No: 2/344 North Street, Muckanamalaippatti Po, Veerapatti, Illuppur Tk, Pudukkottai Dt- 622103, Tamilnadu, shall be henceforth Known as **JAMAL MOHAMMED Y.**

RABIYATHUL BASILIYA (Mother)

Illuppur, 19.09.2026

IndusInd Bank

பதிவு அலுவலகம்: இண்டஸ்இன்ட் வங்கி லிமிடெட், 2401, ஜெனரல் திம்மய்யா சாலை (கன்டோன்மென்ட்), புனே 411 001, இந்தியா. எண் 25, ஸ்டீப்பிள் ரீச், A பிளாக், 3ஆவது தளம், கதீட்ரல் சாலை, கோபாலபுரம், சென்னை - 600086.

பிற்சேர்க்கை-IV-A [பார்க்க விதி 8(6)]
அசையாச் சொத்துக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான E-ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கடன்தாரர் நிறுவனமான **M/s.மில்லினியம் சா:ப்ட் டெக் இந்தியா பி லிட்.,** மற்றும் ஜாமின்தாரர்கள் **திரு.V.பாஸ்கர், திரு.V நந்தகுமார்** மற்றும் **திருமதி.மாலதி** ஆகியோரிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த இண்டஸ்இண்ட் வங்கிக்கு வர வேண்டியுள்ள **31.08.2026** நாள்படியான **ரூ.6,34,53,781/- (ரூபாய் ஆறு கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து எழுநூற்று எண்பத்தொன்று மட்டும்)** தொகையை ஒப்பந்த விகிதப்படியான மேல் வட்டி, செலவினங்கள், கட்டணங்கள், செலவுகள் ஆகியவற்றுடன் திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த M/s.இண்டஸ்இண்ட் வங்கி லிட்., நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் **23.01.2026** அன்று நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் முறையில் **30.10.2026** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர் பெயர்கள்: M/s.மில்லினியம் சா:ப்ட் டெக் இந்தியா பி லிட்.,

அசையாச் சொத்து விவரம்

திருமதி. மாலதி, க/பெ. திரு.ராஜகோபால் அவர்களின் சொத்து, விற்பனை ஆவண எண் 1431/2014, 13.06.2014 நாளிட்டது, திருவிடைமருதூர் சார்பதிவு அலுவலகத்தைச் சேர்ந்தது. இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்பு, அடுக்கக எண் 308 (8E-XVI), முதல் தளம், "ஆதித்யா ஹெரிடேஜ் சர்வீஸ் வில்லா" என அறியப்படும் கட்டடம், B பிளாக், கதவு எண் 8E, கும்பகோணம் - மயிலாடுதுறை சாலை, திருவிடைமருதூர், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு-612104. இதன் மேல்கட்டுமானப் பரப்பு 845 சதுரடி மற்றும் 3987 சதுரடி கொண்ட மொத்த நிலத்தில் அடங்கிய 498 சதுரடிப் பிரிபடாப் பங்கு நிலம், மறுசர்வே எண் 44/1A, 44/1B, 44/2, 44/3A, 44/5A, 44/6A ஆகியவற்றில் அடங்கியது. அமைவிடம் - விஸ்வநாதபுரம் கிராமம், திருவிடைமருதூர் வட்டம், திருவிடைமருதூர் சிறப்பு ஊராட்சி வரம்பு எண் 64, தஞ்சாவூர் மாவட்டம். எல்லைகள்:- வடக்கு: மறுசர்வே எண்கள் 44/17 & 44/9, தெற்கு: மறுசர்வே எண் 44/30, கிழக்கு: மறுசர்வே எண்கள் 44/17 & 44/15, மேற்கு: 44/5 (முதன்மைச் சாலை).

இது திருவிடைமருதூர் சார்பதிவு மாவட்டத்துக்கும் தஞ்சாவூர் பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது.

குறைந்தபட்ச விலை	**ரூ.25,35,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்)**
டேவணித்தொகை (EMD) (குறைந்தபட்ச விலையில் 10%)	**ரூ.2,53,500/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்)**
ஏல உயர்வு தொகை	**ரூ.50,000/-**
தெரிந்த வில்லங்கம் ஏதும் இருப்பின் அது பற்றிய விவரம்	**வங்கிக்குத் தெரிந்த வரையில் ஏதுமில்லை**
ஈடு பெற்றுக் கடனளித்த வங்கிக்குத் தெரிந்து சொத்தின் மீது முன்வைக்கப்படும் உரிமைகோரல்கள், இதர நிலுவைகள் மற்றும் மதிப்பீடுகள் ஏதும் இருப்பின் அது பற்றிய விவரம்	**வங்கிக்கு ஆன மட்டும் தெரிந்த வரையில் அப்படி ஏதும் புலப்படவில்லை**
சொத்து ஆய்வு	**23.10.2026 அன்று முற்பகல் 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை**
தொடர்பு கொள்ள வேண்டிய நபர் மற்றும் தொடர்பு எண்	**Ms. A.கிருஷ்ணகுமாரி (அதிகாரப்பூர்வ அலுவலர்), கைப்பேசி எண்: 9342332287 மின்னஞ்சல்: krishnakumari.A@indusind.com, திரு. கமல் மிஷ்ரா கைப்பேசி எண்: 9819820760**
ஏலப்புள்ளி தாக்கல் செய்யக் கடைசி நாள்	**29.10.2026 அன்று மாலை 04:00 மணி வரை**
ஏலப்புள்ளி திறக்கப்படும் நேரமும் இடமும்	**30.10.2026 அன்று முற்பகல் 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை இணையத்தளம் (https://www.bankeauctions.com) வாயிலாக e-ஏலம் / ஏலக்கோரல் முறையில்**

மேற்கண்ட சொத்துக்கான e-ஏலத்தின் / விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றையும் இதர விவரங்களையும் e-ஏலத்தில் கலந்து கொள்வதற்கான ஏலப்புள்ளிகளைத் தாக்கல் செய்யும் முன் அறிய ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியுடைய **https://www.indusind.com** இணையத்தளத்தில் வழங்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள். அல்லது **https://www.bankeauctions.com** இணையத்தளத்தையும் ஏலதாரர்கள் அணுகலாம் அல்லது பின்வரும் சேவை வழங்கல் நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளலாம்: **M/s.C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், ஏலதாரர் உதவி எண்கள்: 0124-4302020 / 21 / 22, +91 7291981124 / 1125 / 1126; மின்னஞ்சல் முகவரி: support@bankeauctions.com, திரு.பிரபாகரன், தொடர்பு எண்: +91 74182 81709.**

இந்த அறிவிப்பு SARFAESI சட்டம் 2002-இன் கீழான SARFAESI விதிகள், விதி 8, உள்விதி 6 ஆகியவற்றின்படியான 30 நாள் அறிவிப்பாக உங்கள் அனைவருக்கும் விடுக்கப்படுகிறது.

நாள்: 29.09.2026
இடம்: சென்னை

ஒ/ம்- அதிகாரப்பூர்வ அலுவலர்,
இண்டஸ்இண்ட் வங்கி லிட்.

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம் – திருவள்ளூர் மாவட்டம்

ந.க.எண்.3250/2023 – ஆ2 (மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு) நாள் : 29.09.2026

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியை பார்வையிடவும்.
2. வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களால் (NTECL) CSR நிதி பொறுப்பு உட்கட்டமைப்பு திட்டம் 2023–2024 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம் வல்லூர் ஊராட்சியில் Construction of RCC Storm Water Drainage at NTECL Township Rear Side Channel For Free and Quick Disposal of Rainwater to Athipattu Thangal பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோர முகம் வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் கட்டணம் ஏதுமின்றி 01.10.2026 முதல் 15.10.2026 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. முக்கிய தேதிகள் மற்றும் விவரங்கள்:

கடைசி நாள் மற்றும் நேரம்	15.10.2026 மாலை 3.00 மணி வரை
மின் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	15.10.2026 மாலை 3.00 மணி வரை
மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்	15.10.2026 மாலை 4.00 மணி முதல்

செ.ம.தொ.இ./ 2982 /ஒப்பந்தப்புள்ளி/2026

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்

இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணிகை, திருவள்ளூர் மாவட்டம்

இ–டெண்டர் அறிவிப்பு
ந.க.எண்.279/2026/அ5/நாள். 29.09.2026

திருத்தணிகை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் வெளிமுகமை மூலம் தூய்மைப்பணி மேற்கொள்ளும் பணிக்கு பசலி 1436 முதல் பசலி 1437 வரையிலான காலத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு இ–டெண்டர் மூலம் **16.10.2026** அன்று நடத்தப்பட உள்ளது. இது தொடர்பான விவரங்களை திருக்கோயில் அலுவலக நேரத்திலோ அல்லது வலைதளம் site: **https://tntenders.gov.in** –ல் **30.09.2026** காலை **11.00** மணி முதல் தெரிந்து கொள்ளலாம்.

க.ரமணி, பி.ஏ.பி.எல்., இணை ஆணையர்/செயல் அலுவலர்
இங்ஙனம்
R.ஸ்ரீதரன் அறங்காவலர் குழுத் தலைவர்
அறங்காவலர்கள்
வி.சுரேஷ்பாபு, ஜி.உஷாரவி, கோ.மோகனன், மு.நாகன்
செ.ம.தொ.இ./ 2990 /ஒப்பந்தப்புள்ளி/2026

தமிழ்நாடு அரசு – இந்து சமய அறநிலைத்துறை
அருள்மிகு ஞீலிவனேஸ்வரர் திருக்கோயில், திருப்பைஞ்ஞீலி
மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621005
அலுவலக தொலைபேசி எண்.0431–2903565 மின்னஞ்சல்–eothiruppaingneeli@gmail.com
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.1/2026/பசலி 1436/நாள்–28.09.2026
பசலி 1436க்கு அர்ச்சனை பரிகாரத்திற்கு தேவையான பூஜைப்பொருட்கள் குறைந்த விலைக்கு வழங்கும் உரிமம் (முதல் அழைப்பு)

உரிம இனங்கள்

1) உரித்த தேங்காய், 2) சிவப்பு ஈரிலைத் துண்டு, 3) வாழைப்பழம், 4) பூமாலை, 5) பரிகாரத்தட்டிற்கு தேவையான இதரப்பொருட்கள் (முழு விரலி மஞ்சள், மாங்கல்ய மஞ்சள் கயிறு, முழு உருண்டை மஞ்சள், நயம் விபூதி, நயம் குங்குமம், அட்சதை மஞ்சள் அரிசி), 6) காகிதப்பைகள், 7) பிரசாத பேக்கேஜ் பாக்ஸ், 8) வெற்றிலைப்பாக்கு

- TN Tenders மூலம் நடைபெற உள்ள இந்த மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் http://tntenders.gov.in என்ற வலைதளத்தில் தொடர்பு கொண்டு முதலில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
- மின்னணு ஒப்பந்தப்புள்ளி திறப்பிற்கு முந்தைய கூட்டம் நாள் – 05.10.2026 நேரம்–11.00 மணி
- கலந்து கொள்ள தகுதியான ஆவணங்களை பதிவேற்றம் செய்ய கடைசி நாள் – 23.10.2026, நேரம்– காலை 11.00 மணி
- மின்னணு ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் நாள் – 23.10.2026, நேரம்–மாலை 3.00 மணி
- http://tntenders.gov.in வலைதளங்களில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தகவல்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய TN Tenders அலுவலக எண்கள்–044–25679739 மற்றும் மின்னஞ்சல் முகவரி–support.eproc@nic.in

(ஓம்) ச.முத்துராமன் செயல் அலுவலர்
வெ.ஆ.எண்.220/செ.ம.தொ.அ./2026, திருச்சி
(ஓம்) க.அருட்செல்வன் தக்கார்/உதவி ஆணையர் (கூ.பொ)

RITES LIMITED
(A Govt. Of India Enterprise)
Shikhar, Plot No.1, Sector-29, Gurgaon - 122001

Requirement of professionals for the following posts

VC No(s).	Post Name: Regular/ Individual Consultant	No. of Posts	Mode & Venue
YP/26-R1/26	Senior Resident Engineer/S&T	1	RITES Corporate Office, Gurugram / Video Conferencing
YP/28-R1/26	QS and Billing Engineer	1	
YP/30-R1/26	Drawing & Design Engineer/S&T	1	
YP/61-R1/26	ICT Engineer 1: Hospital Management System (National)	1	RITES Regional Office, Guwahati/ Video Conferencing
YP/20-R2/25	Construction Manager (Civil)	1	
YP/21-R2/25	Field Engineer (Civil)	1	
YP/22-R2/25	Construction Supervisor (Civil)	1	
RG/47/26	DGM (Architect / Buildings)	2	Document Scrutiny & Interview
RG/08-R1/26	AM (IT/Network & security)	2	Written, Document Scrutiny & Interview

For complete details, candidates may refer to the detailed advertisement posted on RITES website www.rites.com under Career Section.

மஹிந்திரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: யுனிட் எண்.203, அமிதி கட்டிடம், பிராமல் அகஸ்தியா கார்ப்பரேட் பார்க், தீயணைப்பு நிலையம் எதிரில், கமனி சந்திப்பு, L.B.S. மெயின் ரோடு, குர்லா (மேற்கு), மும்பை-400 070, மஹாராஷ்ட்ரா, இந்தியா. Tel:+91 22 6292 9800
Email id: customercare.mrhfl@mahfin.com, Website - www.mahindrahomefinance.com
பிராந்திய அலுவலகம்: எண்.9/3, முதல் மற்றும் இரண்டாவது தளம், சக்தி எஸ்டேட்ஸ், 3வது தெரு, MG ரோடு, ஆவாரம்பாளையம், கோயம்புத்தூர்-641006.

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு
See rule 8(1) of the Security Interest (Enforcement) Rules, 2002

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 இணைய நலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002-ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட M/s. மஹிந்திரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவின் விதி 3ன் படி கீழ்க்கண்ட தேதிகளிட்ட **கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice)** குறிப்பிடப்பட்ட கடன் தொகையை அதற்கான வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கீழ் குறிப்பிட்டுள்ள கடன் பெற்றவர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன் பெற்றவர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்பெற்ற நபருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதென்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின் படியும் **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 29.09.2026 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடைமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன் பெற்றவர்களோ மற்றும் பொது மக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **M/s. மஹிந்திரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்-க்கு வந்து சேர வேண்டிய கீழே கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைக்கும், அதற்கான வட்டி, இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்டப் பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து).

வ.எண்.1: (கிளை: அரியலூர்) கடன் கணக்கு எண். **XSEMKKM00891449 / 1093698; கடன்தாரர்: வள்ளி P, சக-கடன்தாரர்: திருமுருகன் P, பொன்னுசாமி S;** கோரிக்கை அறிவிப்பு தேதி: **07.08.2025; கோரிக்கை அறிவிப்பின் கோரப்பட்ட தொகை: 05.08.2025** அன்றுள்ளபடி **₹ 5,28,575.07** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விவரம்: அரியலூர் பதிவு மாவட்டம், ஜெயங்கொண்டம் சார் பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட, R.S.எண்.426/8, **அங்கராயநல்லூர் (கிழக்கு) கிராமம், உடையார்பாளையம் தாலுகா, அரியலூர் மாவட்டம், திருச்சி மண்டலம்** என்னும் முகவரியில் உள்ள **206 சதுர மீட்டர் நிலம் மற்றும் கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும் மற்றும் அனைத்து அனுமந்தங்கள் போன்றவை. எல்லைகள்: வடக்கு: முத்துசாமி மனை, தெற்கு: ரோடு, கிழக்கு: தம்புசாமி மனை, மேற்கு: வீதி.

வ.எண்.2: (கிளை: திருப்பானந்தாள்) கடன் கணக்கு எண். **XSEMKKM00928573 / 1169039; கடன்தாரர்: பாண்டியராஜன் B, சக-கடன்தாரர்: சரண்யா M, ஜாமீன்தாரர்: முருகானந்தம் P;** கோரிக்கை அறிவிப்பு தேதி: **19.09.2025; கோரிக்கை அறிவிப்பின் கோரப்பட்ட தொகை: 05.09.2025** அன்றுள்ளபடி **₹ 4,35,786.70** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விவரம்: கும்பகோணம் பதிவு மாவட்டம், திருப்பானந்தாள் சார் பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட, R.S.எண்.13/15, பழைய சர்வே எண்.13/3 பகுதி, **மேலணைப்பேடு சிறிய கிராமம், சூலமரம் கிராமம், கும்பகோணம் மாவட்டம், தஞ்சாவூர் மண்டலம்** என்னும் முகவரியில் உள்ள **100 சதுர மீட்டர் நிலம் மற்றும் கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும் மற்றும் அனைத்து அனுமந்தங்கள் போன்றவை. எல்லைகள்: வடக்கு: R.S.எண்.13/16-ல் உள்ள தங்கவேலு மற்றும் மற்றவர்கள் நிலம், தெற்கு: R.S.எண்.13/16-ன் தெரு, கிழக்கு: R.S.எண்.13/16-ல் உள்ள தங்கவேலு மற்றும் மற்றவர்கள் மனை, மேற்கு: R.S.எண்.13/16-ல் உள்ள தனபால் மனை.

தேதி: 29.09.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
M/s.மஹிந்திரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்

வேலை வாய்ப்புகள்

General

SBI
பாரத ஸ்டேட் வங்கி
மத்திய பணியமர்த்தம் மற்றும் பதவி உயர்வுத் துறை
கார்ப்போரேட் மையம், மும்பை
தொலைபேசி: 022-22820427

கியூ ஆர்-ஐ ஸ்கேன் செய்து விண்ணப்பிக்கவும்.

ஒப்பந்த அடிப்படையில் சிறப்புப் பிரிவு அலுவலர்கள் பணியமர்த்தம்

ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பதவிகளுக்கு, தகுதியுடைய இந்தியக் குடியுரிமைப் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

வரிசை எண்	பதவியின் பெயர்	காலிப் பணியிடங்கள்	31.08.2026 அன்றுள்ள அதிகபட்ச வயது (ஆண்டுகள்)
விளம்பர எண் CRPD/SCO/2026-27/20 (ஒப்பந்தப் பதவி)			
1	டீன், எஸ்.பி.ஐ.எல் கொல்கத்தா	01	55
2	பேராசிரியர், எஸ்.பி.ஐ.எல் கொல்கத்தா	01	55
3	சந்தைப்படுத்தல் நிர்வாகி, எஸ்.பி.ஐ.எல் கொல்கத்தா	01	40
விளம்பர எண் CRPD/SCO/2026-27/22 (ஒப்பந்தப் பதவி)			
1	துணைத் துணைத் தலைவர் (ஐடி ரிஸ்க்)	02	45
2	உதவியாளர் துணைத் தலைவர் (ஐடி ரிஸ்க்)	02	42

இணையவழி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க மற்றும் இணையவழி விண்ணப்பக் கட்டணம் செலுத்த, தகுதி வரம்பு (வயது, தகுதி, அனுபவம், முந்தைய பணி போன்ற பிற விவரங்கள்), காலிப் பணியிடங்களின் விவரங்கள், தேவையான கட்டணம் மற்றும் பிற விவரங்கள் அறிய, வங்கியின் **https://sbi.bank.in/web/careers/current-openings** வலைதளத்தைப் பார்க்கவும். விண்ணப்பிக்கும் முன்னரும், கட்டணம் செலுத்தும் முன்னரும் தங்கள் தகுதி மற்றும் பிற விவரங்களை உறுதி செய்து கொள்ள விரிவான விளம்பரத்தை பார்க்கவும். ஏதேனும் சந்தேகங்களுக்கு, வங்கியின் அதிகாரப்பூர்வ **(https://sbi.bank.in/web/careers/post-your-query)** வலைதளத்திலுள்ள **"CONTACT US" —> "Post Your Query"** என்ற இணைப்பின் மூலம் எங்களுக்கு எழுதவும்.

- **இணையவழி விண்ணப்பங்கள் பதிவு செய்ய மற்றும் கட்டணம் செலுத்தவேண்டிய தேதி: 16.09.2026–லிருந்து 06.10.2026 வரை.**

இடம்: மும்பை
தேதி : 16.09.2026
பொது மேலாளர் (ஆர்பி மற்றும் பிஎம்)